377

உ

# ஞானரத்னம்.

17 OCT 1922

பிரஹ்மஸ்ரீ, சுப்பிரமணிய சிவம் அவர்களால்
எழுதப்பட்டது.

சென்னை:
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1922.

[விலை அணா. 4

R65
N22
125869

181.48
219

உ

# ஞானரத்னம்.

பிரஹ்மஸ்ரீ, சுப்பிரமணிய சிவம் அவர்களால்
எழுதப்பட்டது.

17 OCT 1922
MADRAS

சென்னை :
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
**நா. முனிசாமி முதலியாரவர்களால்**
வெளியிடப்பெற்றது.

1922.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா. 4

600 008
175869

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
NO. 15, VENKATESA MAISTRY STREET,
SOWCARPET, MADRAS.

# ஞானரத்தினம்.

## முதற்பாகம்.

15-9-11-வெள்ளிக்கிழமை.

இன்னது எழுதுகிறது என்று ஒன்றும் தோன்றவில்லை. சிறிது யோசனை செய்து யாதேனுமோர் விஷயத்தைக்குறித்து எழுதலாமென்றால், யோசிக்க யோசிக்கப் பாழாய் முடிகிறது. ஆகையால் யோசிப்பதிலும் பிரயோசனம் இல்லை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் நான் வெகு பாடுபட்டு இரவும் பகலும் அலைந்துதிரிந்து ஆராய்ந்த அறிவெல்லாம் இப்பொழுது வெகு அற்பமாயும் பிரயோசனமற்றதாயும் தோன்றுகிறது. ராஜரீக வியவகாரங்கள், ஜனசமுதாய சட்டதிட்டங்கள், கைத்தொழில் யந்திரத் தொழிற்கட்சி வாதங்கள், புருஷர்கள், ஸ்திரீகள் இவர்களுடைய ஸ்வதந்திர விஷயங்களாதிய இவையெல்லாம் ஸ்வப்பன போகத்திற்குச் சமமாய்ப் போய்விட்டன. ஆகையால் இவ்விஷயங்களைப்பற்றி எழுத நினைத்தால் மனதிற்கு உற்சாகம் உண்டாகவில்லை. ஆயினும் ஜகன் மாதாவாய் ஜாக்கிர ஸவப்பன சுஷுப்தி எனப்பட்ட திரிபுவனங்களிலும் தன்னரசு செலுத்திவரும் பெண்ணரசியாகிய மகாசக்தி என்னை எழுதும் பொருட்டு ஆக்ஞை செய்கிறாள். இவ்வனந்தங்கோடி ஜீவராசிகளையும் தனது ஆக்ஞையினால் கட்டுப்படுத்திக் காற்றிற் காற்றாடி போல் சுற்றச் செய்கின்ற அம்மகாசக்தியினது உத்

தரவை சிரமேற் கொண்டு சதானந்த சாகரமாகிய எனது சற்குருவின் கடாட்சத்தால் யான் எழுதத் துணிகின்றேன். எத்தகைய பொறுக்க வொண்ணுத கஷ்டங்கள் வருங்காலத்தும், அக்கஷ்டங்கள் வருவதற்கு முன்னமேயே வலிதில் வந்து கைகொடுத்து உதவி என்னை இதுகாறும் காத்து ரட்சித்து வந்த ஜகன்மாதா என்னைக் கைவிடாள் என்று நம்புகிறேன்.

---

16-9-11-சனிக்கிழமை.

---

உலகத்தில் எது உண்மை? வெவ்வேறு விதமான மதங்களும் கொள்கைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் அவரவர் மதமே சிரேஷ்டமென்றும் அவரவர் கொள்கைகளே உயர்ந்தவை யென்றும் கூறுகின்றனர். கர்ம ஸ்தாபகன் கர்மமே சுகதுக்கங்கட்குக் காரணமென்றும், கர்மத்தினுலேயே சிருஷ்டி ஸ்திதி சம்ஹாராதி தொழில்கள் நடக்கின்றன வென்றும், கர்மமே பந்த மோட்சங்கட்குக் காரணமென்றும் உரைக்கின்றனன். பக்தனே, எல்லாருக்கும் யஜமானனுய் சிருஷ்டி ஸ்திதி சம்ஹாராதி சகல வல்லமைகளோடும் கூடிய ஈஸ்வரன் ஒருவன் உளனென்றும் அவனே நமது சகலவித சுகதுக்கங்கட்கும் காரணமென்றும் அவனுடைய கிருபைக்குப்பாத்திரமாய் விட்டால் நித்தியானந்தத்தை அடையலாமென்றும் சொல்கின்றனன். யோகியோ, சுவாச பந்தனம் செய்துபிராணனை உள்ளடக்கி மனதின் சலனத்தை நிறுத்திவிட்டால் மோட்சம் கிட்டும் என்று சாதிக்கின்றனன். ஞானியோ, ஏகமாய் எங்கும் நிறைந்து இரண்டற்றிருக்கும் சத்திய வஸ்துவினிடத்தில் சுகமேது,

துக்கமேது? சுகதுக்கமெல்லாம் பிராந்தி மாத்திரம். நாமரூபாதிகள் பிராந்தி மாத்திரம். ஆகையால் கற்பனை மாத்திரமாயுள்ள விஷயங்களில் சிந்தனை ஏன்? கற்பனை நீதமாய் சத்தியமா யிருக்கப்பட்ட சிவமே நான் எனப் பறையறைகின்றான். இவைகளில் உண்மை எது? எதை உறுதியாய்க் கடைப்பிடிக்கலாம்? ஒவ்வொருவரும் ஒவ்வொருவித நிறமுள்ள மூக்குக்கண்ணாடியை அணிந்து கொண்டிருக்கிறார்கள். பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டிருப்பவனுக்கு பார்க்கப்படும் வஸ்து பச்சை நிறமாகவும், சிவப்புக் கண்ணாடியை அணிந்திருப்பவனுக்குச் சிவப்பு நிறமாகவும் இங்ஙனமே அவரவர்களின் கண்ணாடியின் நிறம் எவ்விதமோ அவ்விதமே தோன்றும். நீ சிவப்புக்கண்ணாடி தரித்துக்கொண்டிருக்கிறாய். உனக்கு உன்னால் பார்க்கப்படும் வஸ்து சிவப்பு நிறமாகவே தோன்றுகிறது. உன் கண்களி னின்றும் அச்சிவப்புக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு நான் தரித்திருக்கும் பச்சைக்கண்ணாடியை வாங்கித்தரித்துப்பார். உன்னால் முன் சிவப்பு நிறமாகக் காணப்பட்ட வஸ்து இப்பொழுது பச்சை நிறமாகத் தோன்றும். ஆகையால் பார்க்கும் கண்ணாடிகளின் நிறம் வித்தியாசமே யொழிய, பார்க்கப்படும் வஸ்துவில் வித்தியாசம் இல்லை. அதுபோலவே ஒவ்வொருவரும் அவரவரது நிலைமையிற் கூறுகின்ற நீதிகள் முற்றும் உண்மையே. ஓர் பக்தன் தனது பக்தியாகிற நிலைமையைவிட்டு நீங்கி, ஞானியின் நிலைமையில் நின்று பார்க்கட்டும். அப்பொழுது பக்தி பெரிதாய்த் தோன்றாமல், ஞானமே பெரிதென்பான். ஆகையால் எனக்கு யாருடனும் தர்க்கம் செய்வதற்கு மனம் இசைகிறதில்லை. நாவெடுத்து இது பெரிது என்று சொல்ல என்னால் முடியாது.

## 18-9-11-திங்கட்கிழமை.

---

நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை. அதாவது கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாள். ஆகையால் அன்றைய தினம் எல்லா வேலையினின்றும் நீங்கிக்கடவுளைப் பிரார்த்தனை செய்து ஆறுநாட்களாய் வேலையினாற் களைத்திருக்கிற சரீரத்திற்கு சுகம் கொடுப்பார்கள். இயேசு கிறிஸ்துவானவர், 'ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது; மனிதன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை' என்று சொன்னார். இஃது உண்மையிலும் உண்மையே. ஞாயிற்றுக்கிழமைதோறும் ஓய்வுநாளாகுமோ? ஓய்வுநாளென்றால் மனிதன் களைப்பி னின்றும் நீங்கிச் சுகம் அடையும் நாளல்லவோ? ஞாயிற்றுக் கிழமைகளில் யாதொருவித வேலையும் செய்யாவிட்டாலும் மனிதனுக்கு அவனவன் மனதிலுள்ள காமக்குரோதாதிய களைப்பு நீங்கிவிட்டதோ? அவன் சிறிதேனும் துக்கம் இன்றிப் பூர்ண சுகத்தை அனுபவிக்கின்றனனோ? ஆகையால் ஜெனன மரண சக்கரத்தினின்றும் விடுபட்டு இரண்டற்ற பிர்மானுபூதியை யடையும்நா ளென்றைளோ, அந்நாளே ஓய்வுநாள். அதுவரையில் ஜீவனுக்கு ஓய்வுநாள் கிடையாது. ஆதலால், சினேகிதர்களே! என்றைக்கும் எப்பொழுதும் எவ்விடத்தும் சுறுசுறுப்பாய் வேலை செய்யுங்கள். அளவற்ற ஆனந்தத்தை அளிக்கப்பட்ட அந்த ஓய்வு நாளை சீக்கிரத்தில் அடையும் பொருட்டுப் பாடுபடுங்கள். நாம் மாதாவின் கர்ப்பவாசத்திற் பட்டகாலத்திலேயே எமன் நம்மை நோக்கி யாத்திரை புறப்பட்டுவிட்டான். வயது செல்லச் செல்ல நம்மை நெருங்கிக்கொண்டிருக்கிறான். அவன் எந்த நிமிஷத்தில் நம்மைப்பற்று

வானே அதை எவரும் அறியார். ஆகையால் இப்பொழுதே இன்றைக்கே எழுந்திருங்கள். உங்கள் மனதினின்றும் காமக்குரோதாதி களேயைப் பிடுங்கி யெறியுங்கள். சாது சங்கம் சாருங்கள். ஸ்திரமான ஒய்வு நாள் சீக்கிரத்தில் உங்களுக்குக் கிடைக்கும்.

---

19-9-11-செவ்வாய்க்கிழமை.

---

ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி இந்த ஐந்து பூதங்களேயும் இந்த ஐந்து பூதங்களின் சேர்க்கையாலுண்டாகிய ஜடவஸ்துக்களேயும் கையாண்டுவருவதின் சாமர்த்தியத்தை அறிவென்று உலகினர் கூறி, அப்பேர்ப்பட்ட சாமர்த்தியசாலிகளே அறிவாளிகளென மெச்சுகின்றனர். தன்னேத் தவிர மற்ற வஸ்துக்களேப்பற்றி ஆராய்தல் அறிவாகுமானல், தன்னேப்பற்றி ஆராயும் அறிவு அறிவன்ருே? தான் யார் என்று ஆராய்தலே அறிவன்றி, மற்ற வஸ்துக்களின் அறிவு அறிவல்ல. தனது சரீரத்தினுள் நுழைந்து மனதை வசப்படுத்தித் தான் யாரென்று ஆராய்ந்து அறியாமல் மற்ற அநித்திய வஸ்துக்களேப் பற்றி ஆராய்தல் தகுதியோ? தனது ஸ்திதியே தனக்குத் தெரியாமலிருக்க, பிறவற்றின் தன்மைகளேயும் குணகுணங்களேயும்பற்றி எங்ஙனம் நிச்சயமாய் அறியலாகும்? 'நான்' என்று சொல்வது இச்சரீரத்தை யல்லவென்று அறிகிருேம். ஏனென்ருல் நரம்பு, எலும்பு, தோல், ரத்தம், மாமிசம் இவைகளாற்கட்டப்பட்ட இந்த ஸ்தூல சரீரமானது மனம் அல்லது அந்தக்கரணம் என்று சொல்லப்பட்ட சூட்சும சரீரத்தினல் ஆட்டப்பட்டு அதின் உத்தரவின்படி யெல்லாம் நடக்கிறது. இவ்வந்தக்கரணமாகிய

சூட்சும சரீரமோ 'நான்' என்றால், அதுவும் அல்ல. ஏனென்றால் இச்சூட்சுமசரீரம் அடிக்கடி மாறுதலடையப் பெற்று சங்கற்பம் அல்லது அவித்தையாகிய காரண சரீரத்தினால் நடத்தப்படுகிறது. சங்கற்பம் அல்லது அவித்தையோ 'நான்' என்றால், அதுவும் அல்ல. சங்கற்பிக்கிறவனாக அல்லது அவித்தைக்கு யஜமானனாக 'நான்' இருக்கிறேன். ஆனால் 'நான்' என்று சொல்லப்பட்ட வஸ்துவின் லட்சணம்தான் யாது? இதை யறிந்தால் சர்வத்தையும் அறிந்ததுபோலாம். இச்சரீரத்தில் இருக்கிற 'நான்' என்பதை அறிந்துவிட்டால், எல்லாக் காலத்திலும் எல்லாவிடத்திலும் எங்கும் இருக்கிற உண்மையான வஸ்துவை அறிந்ததுபோலாம். இதுவே அறிவு. அறிவு என்பது ஆனந்தத்தை அளிக்கவேண்டும். 'நான்' என்ற சத்திய வஸ்துவின் அறிவே நித்தியானந்தத்தைக் கொடுக்குமாதலின், இதுவே மனுஷ்ய ஜன்மப் பிரயோசனமாகும்.

20-9-11-புதன்கிழமை.

---

ஆத்ம வஸ்துவானது அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களெனப்பட்ட பஞ்சகோசங்களினால் சூழப்பட்டதாக பிரமித்திருக்கிறதென்று மகான்கள் கூறுகின்றனர். ஆனால் நாம் கூர்ந்து பார்க்கின், ஆத்ம வஸ்துவின் ஸ்வரூபத்தை யறிய வொட்டாமல் அனந்தங்கோடி கோசங்கள் மூடியிருக்கின்றனவென்று அறிவோம். இவ்வனந்தங்கோடி கோசங்களையும் ஐந்து பாகங்களாகப் பிரித்து ஐந்து பொதுப் பெயரிட்டனர் மேலோர். இவ்வனந்தங்கோடி கோசங்களில் யாதேனும் ஒன்றையே எடுத்து வைத்துக்கொண்டு ஆத்ம

வஸ்துவெனக் குளறுகின்றனர் உலகினர். ஆத்ம வஸ்துவைத் தன்னிற்றானாய் அறிந்தவர்கள் மனோ வாக்குக் காயமாதி வியாபாரங்களில் மோன நிலையை அடைவார்கள். பத்துப்பேர் கூடி ஆடிப்பாடிக் குதித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், ஒருவன் அவர்களுடைய ஆடல்பாடல்களில் கலவாமலும் வாயைத் திறந்து ஒன்றும் பேசாமலும் சும்மாயிருக்க, அவனை எப்படி அவர்களது ஆட்டத்திற் சம்பந்தமற்றவன் என்று நினைப்பார்களோ, அப்படியே அவித்தையாகிய காரண சரீரமும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று சொல்லப்பட்ட அந்தக்கரணமாகிய சூட்சுமசரீரமும் கரசரணாதி அவயவங்களுடன் கூடிய ஸ்தூலசரீரமும் பலவிதலீலைகள் புரிந்துகொண்டிருக்க, ஆத்ம வித்தானவன் இவைகளுடைய லீலைகட்கெல்லாம் சர்வ சாட்சியாய் நின்று அவைகளுடன் யாதொரு விதத்திலும் சம்பந்தப்படாமல் தன்னிற்றானே யானந்தத்தை யடைந்து இந்த லீலைகளைப் பொய்க்கூத்து என்று வேடிக்கை பார்ப்பான். சிற்சில சமயங்களில இவ்வனுபவம் எனக்குண்டாயினும் மிக்க சமயங்களிற் கீர்த்திபெற வேண்டுமென்னும் ஆசையானது என்னைப் பிடித்து ஆட்டுகின்றது. கீர்த்தியடைய வேண்டுமென்று நினைத்து பலவித தந்திரங்களை எழுதியும் பேசியும் உலகினரை ஏமாற்ற நினைக்கின்றேன். "Physician, heal thyself—(வைத்தியரே! முதலில் உம்முடைய நோயைப் போக்கிக்கொள்ளுங்கள்)" என்னும் வாக்கியத்தை மறந்து அந்நியரைச் சீர்திருத்தப் பார்க்கின்றேன். "Satan get thee hence-பைசாசமே! இவ்விடத்தினின்றும் செல்க" என்று நான் தைரியமாய் ஆசை, காமம், கோபம், குரோதம் முதலாய பைசாச ரூபமாய் வருகின்ற மாயையை என்றைக்கு அடித்துத் துரத்தவல்லேனோ

அன்றைக் கல்லவோ என் உண்மையான நிலைமை எனக்கு விளங்கும். அதற்காகத் தான் சந்நியாசம் வேண்டுமென் றனர் பெரியோர்.

---

21-9-11-வியாழக்கிழமை.

---

காமம், கோபம், குரோதம், பொறாமை முதலிய துர்க்குணங்களே பிசாசங்களாய் மனிதர்களைப் பீடித் திருக்கின்றன. எவ்வளவோ அமைதியாயுள்ள ஒரு மனி தன் கோபமாகிய பிசாசினாற் பீடிக்கப்பட்ட காலத்தில் தனது ஸ்வய புத்தியாகிய அமைதியை விட்டுக் கைகால் களை ஆட்டிக்கொண்டு முகத்தை அங்கும் இங்கும் இழுத் துக்கொண்டு துள்ளிக் குதிக்கிறான். இது கோபத்தின் சொரூபம். இங்ஙனமே காமம், குரோதம் முதலிய சகல வற்றிற்கும் பிரத்தியேகமான லட்சணங்களும் வடிவங் களும் இருக்கின்றன. இப்பிசாசங்கள் சிலபேரைச் சில காலம் பிடித்தும் சிலபேரை நீண்டகாலம் பிடித்தும் துன் புறுத்துகின்றன. தனது ஸ்வயபுத்தி வந்தவுடன் தான் பிசாசத்தினால் ஆட்டப்பட்டதாகவும் இனிமேல் ஜாக் கிரதையா யிருக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய் கிறான்; ஆனால் மனம் பல ஈனமாகி வைராக்கியம் இல் லாமையினாலே, மறுபடியும் அப்பியாசங்களின் வசம் தனக்குத் தெரியாமலே அகப்பட்டு விடுகிறான். ஆதலால் அப்பியாசங்களின் வசம் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள விரும்பினால் மனிதன் மனதைப் பலப்படுத்தி வைராக்கியத்தை அப்பியசிக்கவேண்டி யிருக்கிறது. இப் பிசாசங்கள் வேறு வேறாயுள்ள அநேக பிசாசங்கள் அல்ல. ஒரே பிசாசுதான் பலவித ரூபங்களையும் உடைய

தாகி எவரெவர்களை எந்த எந்த ரூபத்தினாலும் லட்சணத்தினாலும் மயக்கலாமோ அந்த அந்த ரூபத்தையும் லட்சணத்தையும் வகித்து அவர்களை மயக்கி கைவசப்படுத்திப் பின்பு அளவற்ற துன்பத்திற் குட்படுத்துகின்றது. இப்பிசாசங்களை மனிதனது ஹிருதயத்தினின்றும் துரத்த வல்லவர் எவரோ அவரே குருவாவர்.

---

22-9-11-வெள்ளிக்கிழமை.

---

'நான்' 'நான்' என்று, பேசும் போதெல்லாம் சொல்கிறோமே, அந்த 'நான்' என்பதன் சொரூபம் என்ன? லட்சணம் யாது? இவற்றை அறிவதற்குரிய ஆவலும் அறிவுமே வித்தையெனப்படும். மற்ற அறிவெல்லாம் அவித்தையே. வாஸ்தவமான வித்துவான் துக்கமென்பதையே யுடைத்தா யிரான். எது வாஸ்தவ அறிவா யிருக்குமோ, அவ்வறிவுடன் ஆனந்தம் உண்டாம். எது வாஸ்தவ ஆனந்தமா யிருக்குமோ, அவ்வானந்தத்துடன் அறிவுண்டாம். எது வாஸ்தவ அறிவும் ஆனந்தமுமா யிருக்குமோ, அவ்வறிவும் ஆனந்தமும் முக்காலத்தும் எக்காலத்தும் உள்ளதாம். ஆகையால் எக்காலத்தும் உள்ளதாய் அறிவாய் ஆனந்தமா யிருக்கப்பட்ட வஸ்து 'நான்' என்பதே என்று ஸ்ருதி யுக்தி அநுபவமென்னு மிவற்றால் அறிகிறோம். தவிர, 'நான்' என்பதன் ஸ்வரூபத்தை அறிந்த ஞானிகள் நித்திய சுகப்பிர்மமாக விளங்குகின்றனர். உலகினர்க்கு அந்த உண்மையை அறியும்படியான மனோ பரிபாகம் இன்மையால் அழியாத அறிவும் ஆனந்தமும் அவர்களால் அநுபவிக்கப் படவில்லை. பக்குவமாகாத ஒரு பெண் தனது மூத்த

சகோதரியைப் பார்த்து, 'அக்காள்! நீ தினந்தோறும் உன் புருஷனிடம் சேர்ந்து சயனிக்கின்றாயே அதனால் உண்டான சுகம் எத்தன்மையது' என்று வினவ, அதற்கவள், 'தங்காய்! நீ இன்னும் சிறு குழந்தை, நீயும் என்னைப்போலப் பக்குவமான பின்னர் நீ உன் புருஷனிடம் சேர்ந்து பார்த்தால், நான் அனுபவிக்கும் சுகத்தின் தன்மை உனக்குத் தானே விளங்கும். அதுவரை என்னால் உனக்குச் சொல்லவும் முடியாது. உன்னால் அறியவும் முடியாது,' என்றாள். அதுபோல், உலகினர் ஒவ்வொருவரும் பக்குவமடைந்து விட்டால், அழியாத அறிவும் ஆனந்தமும் அவரவரது அனுபவத்திற்றானே விளங்கும்.

---

23-9-11-சனிக்கிழமை.

---

மனிதன் மனதிற்கு அடிமையாயிருக்கின்றான். மனமானது மனிதனைக் குரங்குபோலாட்டுகின்றது. பிரியமான வஸ்துவென்று ஒன்றைக்காட்டி அது கிடைத்த காலத்திற் சந்தோஷத்தையும் அது கிடையாத காலத்திலோ அல்லது அது கிடைத்து நீங்கிய காலத்திலோ துக்கத்தையும் கொடுத்து மனிதனைத் துன்பத்திற்குள்ளாக்குகின்றது. ஆ! ஆ! இக்கொடிய மனம் என்றைக்குச் சாகுமோ, அன்றைக்குத்தான் மனிதன் துன்பத்தினின்றும் விடுபடுவான். மனதையடக்கி அடிமையாக்கி அதன் வாயிலாகவேண்டிய பணிவிடைகளைப் பெற்றுச் சுகமாய் வாழலாமென்றால், அடிமையாயிருக்கப்பட்ட மனமானது யஜமானனாவதற்கு வழி பார்த்துக்கொண்டேயிருக்கும். அடிமையாயிருப்பவன் யஜமானனாவானென்பதும் யஜ

மானஞயிருப்பவன் அடிமையாவானென்பதும் சிருஷ்டி நீதிகளுளொன்று. ஆகையால் மனதைக்கட்டி அடிமையாக்குவதைவிட அதனைக்கொல்லுதலே மேலாகும். இறந்தது பிறக்கும், பிறந்தது இறக்கும் என்பதும் ஒரு சிருஷ்டி நீதியாம். ஆகையால் மனதைக்கொன்ருல், அதாவது, அது இறந்தால் திரும்பவும் பிறக்குமன்ருே? ஆகவே, கொல்லுதலும் பிரயோசனம் இல்லை யெனின், மனம் எனப்பட்ட ஒன்று உளது என்பதும் அதைக் கொல்லவேண்டு மென்பதும் வீண் பிரமமேயாகும். மனதைக் கொல்லுதலென்ருல் இல்லாமையாகிய மனதை உண்மையென்று பாவித்த பாவனையை நீக்குதலாம். எப்பொழுதும் இருக்கப்பட்டது ஒருபொழுதும் இல்லாததாகாது. எப்பொழுதும் இல்லாதது ஒருபொழுதும் உள்ளதாகாது. இவ்வுண்மையின் நிச்சயானுபவமே நித்திய சுகத்திற்குக் காரணமாம். இதுவே முக்தி எனப்படும்.

ஓம் தத் ஸத்.

---

27-9-1911-புதன்கிழமை.

---

'மனதே மனிதர்களுக்கு பந்தத்திற்கும் மோட்சத்திற்கும்காரணமாகின்றது' என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. நிமிஷந்தோறும் சலித்துக்கொண்டு நிமிஷந்தோறும் ஆதியந்த முடையதாய் இருக்கப்பட்ட மனத்தின் தன்மையை அறிவதே கஷ்டமாயின், ஆதியந்தமில்லாத தனித்தனி வஸ்துவின் தன்மையை அறிவது எவ்வளவு கஷ்டம்! மனதைத் தவிர வேறெ உண்மையான தோழனில்லை யென்று சிற்சில சமயங்களில் தோன்றுகின்றது.

மனதை ஒரே நிலையில் நிறுத்தி நிர்மலமாய் வைத்துக் கொண்டால், அம்மனது நமக்கு வேண்டிய வஸ்துக்களை நாம் விரும்பும் முன்னமேயே அளிக்கின்றது. மனத்தை ஜயித்தவர்களே சிவஞானச் செல்வராவர். ஈஸ்வரன் மனத்தை அடிமையாய் வைத்திருக்கிறபடியினாலே தான், 'இச்சாமாத்திரம் பிரபோத் சிருஷ்டி' யென்னும்படி சிருஷ்டி ஸ்திதி சம்ஹாராதி சகல தொழில்களையும் நடத்துகிறார். ஆதலினாற்றான் ஈஸ்வரனும் ஞானியும் சமம் என்றனர் ஆன்றோர். நாம் நமது புருஷப் பிரயத்தனத்தால் மனத்தை அடக்கி நமது வசப்படுத்தி விடுவோமாயின், நமக்கு மனதைப்போன்ற உண்மையான சிநேகிதர் ஒருவரும் இல்லை; மனது நமக்கு அறிவிக்காத ரகஸ்யம் ஒன்றும் இராது. மனத்தையடக்க மனந்துணையாகும்; மேலும் அஃதொரு சேவகன்போல் காத்திருந்து நினைக்கும் முன்னமேயே வேண்டிய பணிவிடைகளைச்செய்யும். இந்தமனதே நமக்கு யஜமானனாயிருந்து நம்மைக் கீழும் மேலுமாகப்புரட்டி இடைவிடாத துன்பத்தைக்கொடுத்து வருகிறது. சற்குருவின் கிருபாகடாட்சத்தாலும் தெய்விக சம்பத்தாலும் நாம் இந்த மனத்தை விஷய போகத்திற் செல்லாவாறு வைராக்கியத்தாற் தடுத்து உள் நாட்டம் பெறச் செய்வோமாயின் அது நாம் சொன்னபடியெல்லாம் கேட்கும். பிறகு நாம் அந்த மனதின் உதவியால் ஒப்புவமையற்ற நித்திய நிரதிசயானந்தத்தை அனுபவித்தல் கூடும். ஓம் தத் ஸத்.

---

13-10-1911-வெள்ளிக்கிழமை.

---

ஸ்தூல சரீரத்திற்குச் சிறிது களைப்பு நேரிட்டால் சூட்சும சரீரம் களைப்படைகிறது. சூட்சும சரீரத்திற்குச்

சிறிது துன்பம் நேரிட்டால் அது ஸ்தூல சரீரத்தில் பிரதி பலிக்கிறது. சூட்சும சரீரமும் ஸ்தூல சரீரமும் ஒன்றுக் கொன்று சம்பந்த முடையனவா யிருக்கின்றன. சூட்சும சரீரமின்றி ஸ்தூல சரீரம் இல்லை; ஸ்தூலசரீரம் இன்றிச் சூட்சும சரீரம் இல்லை.

---

17-10-11-செவ்வாய்க்கிழமை.

---

ஒவ்வொரு பிராணிக்கும் தான் துக்கத்தை அனுப விப்பதாகப் பிராந்தியுற்று அந்தத் துக்கத்தினின்றும் நிவிர்த்தி பெறவேண்டுமென்று அபரிமிதமான விருப்பம் இயல்பாய் இருக்கின்றது. இவ் விருப்பத்தினலேயே எல்லா வியவகாரங்களும் நடந்தேறி வருகின்றன. துக்க நிவிர்த்தியடைவிக்கும் மார்க்கம் யாது என்னுங் கேள்வி யானது உலகம் எக்காலத்தில் விரிவுபட்டதோ அக்காலம் முதல் இக்காலம் வரை கேட்கப்பட்டு வருகின்றது. இன்னும் உலக முள்ளளவும் கேட்கப்படும். இக்கேள் விக்கு விடை எந்தப் பிராணியின் ஹிருதயத்தில் சமா தானமாய் ஏற்பட்டு ஸ்திரப்பட்டுவிடுமோ, அந்தப் பிரா ணிக்கு உலகம் ஒக்காளமாக முடியும். விரும்பியோ, விரும்பாமலோ, ஒவ்வொரு பிராணியினது ஹிருதயத்தி லும் இந்தக் கேள்வியானது துடித்துக்கொண்டிருக்கின் கிறது. மார்பின்மேல் கைவைத்துப் பார்க்கும்பொழுது காணப்படுகின்ற ஹிருதயத் துடிப்பு நின்றுவிட்டால் எப்படி பிராணன் அடங்கிவிடுமோ, அப்படியே இந்தக் கேள்வியின் துடிப்பு நின்றுவிட்டால் உலகம் அடங்கி விடும். இதற்காகப் பல மகான்களும் பல காலத்தேற் பட்டுப் பலவித மார்க்கங்களைக் காண்பித்தார்கள். பல

மார்க்கங்களும் வெவ்வேறுய்த் தோன்றியபோதிலும் அவை யாவும் சேர்ப்பிக்கும் இடம் ஒன்றேயாகும். "சித்தம் எந்த ஸ்வரூபமாகிறதோ அந்த ஸ்வரூபமாகிறுன் மனிதன். இது ரகஸ்யங்களுக்குள் ரகஸ்யம்" என்று உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்று பிரபலமாகக் கொண்டாடப்படுகிற மதங்களும், சார்வாகம், லோகாயதம் என்று தாழ்வாகக் கருதப்படுகிற மதங்களும், இன்னும் உலகத்தில் தற்காலத்தில் முன்னணியில் நிற்கிற ஹிந்து மதம், பௌத்தமதம், கிறிஸ்து மதம், மகம்மதியமதம் எனப் பெயர்பெற்ற மதங்களும் முன் கூறப்பட்டுள்ள ஸ்ருதி ரகஸ்யார்த்தத்தை யறியாமல் ஒன்றுடனென்று தர்க்கம்செய்து தலைகீழாகின்றன. அவரவர்கள் உண்மையென்று எதை மனப்பூர்வகமாய் விசுவாசிக்கின்றுர்களோ, அதுவே அவர்களுக்குப் பலனைக்கொடுக்கும். ஒவ்வொரு மனிதனது அனுபவத்திலும் இஃது உண்மையென்று விளங்கும். ஆகையால் ஒவ்வொருவரும் எதையாவது ஒரு மார்க்கத்தை மனப்பூர்வகமாகச் சந்தேக விபரீதமறக் கடைப் பிடிப்பார்களாயின் முக்தி சித்திப்பது நிச்சயமாம். இது சத்தியம்.

ஓம் தத்ஸத்.

---

18-10-1911-புதன்கிழமை.

---

நாம் எவ்வளவோ உயர உயரப் பறந்து தத்துவ ஞான நியாயங்களை வாசாமகோசரமாய் வாய்கொண்ட மட்டும் வீசி விரித்தாலும், நமது புத்தியில் அந்த நியாயங்கள் உண்மையிலும் உண்மையென்று தோன்றி வெகு

தெளிவாய் விளங்கினாலும், பிரபஞ்சதிருஷ்டி யுள்ளவரையில் நாம் ஈஸ்வரனை நாமரூபாதிகளுடன் பூஜிக்கவே வேண்டியிருக்கின்றது; நாமுய்வதற்கு இதனினும் வேறு வழியில்லை. ஒவ்வொரு மனிதனுடைய ஹிருதயத்தின் ஆழாழியினின்றும் ஈஸ்வரனை நாமரூபாதிகளுடன் கற்பித்து அவ்வீஸ்வரனை வணங்குவதற்கு அடங்காத ஆர்வம் உண்டாகின்றதென்பதைப் பிரத்தியட்சத்தில் யாவரும் அறிவார். மனிதன் தனது திருஷ்டியால் ரூபத்தைத் தரிசிக்கும் வரையில் ரூபத்திலேயே ஈஸ்வரன் பிரகாசிக்கிறார். ஆகையால் நாமரூபாதிகளுடன் கூடிய ஈஸ்வர ஆராதனை ஜீவகோடிகளுக்கு அத்தியாவசியமாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னை யறியாமல் வெளிக்கிளம்புகின்ற நாமரூபாதிகளுடன் கூடிய ஈஸ்வரன் பேரிலுள்ள ஆவலைத் தடுத்து அனுவசியமான மூளைக்குழப்பத்தை உண்டாக்கி ஈஸ்வரனில்லையென்று வாதித்ததினாலேயே பௌத்த மதமானது ஏதோ சிறிதுகாலம் மின்னொளி போற் பிரகாசித்திருந்தாலும் அது சாதுசங்க பூமியாகிய நமது பாரத வர்ஷத்தில் வேரூன்றமுடியாமல் அடியோடு நமது தேசத்தைவிட்டு அப்புறமாய்விட்டது. ஆதலால் ஒவ்வொருவருக்கும் அவரவர் மனதில் எவ்வித ரூபத்திலும் நாமத்திலும் பேரவா உண்டாகின்றதோ, அவ்வித ரூபத்தினிடத்திலும் நாமத்தினிடத்திலும் அவரவர் அன்பைச்செலுத்திப் பஜிக்கட்டும்.

ஓம் தத் ஸத்.

---

19-10-1911. வியாழக்கிழமை.

---

சிருஷ்டியின் உண்மையைப்பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் உண்டாயிருக்கின்றன. நாமரூபாதிகளாற்

கட்டப்பட்ட ஒரு ஈஸ்வரன் வான மண்டலங்களுக்கு மேலே ஏதோ ஒரு பரமண்டலத்திலிருந்துகொண்டு இப்பூவுலகைச் சிருஷ்டித்தாரென்று சிலரும், இவ்வுலகம் ஆதியந்தமற்றது, இக்காலத்துக்குமுன் எக்காலத்தும் இப்பொழுது காணப்படுகிறபடியே யிருந்தது, இனிமேலும் இப்படியே யிருக்கும், ஆனால் இவ்வுலகிலுள்ள வஸ்துக்கள் அடிக்கடி மாறுந்தன்மையுடையன என்று சிலரும், பரப்பிர்மவஸ்துவில் ஒரு அற்பாம்சமாகிற மாயையினால் இந்திரஜாலம்போலத் தோற்றுவிக்கப்பட்டது என்று சிலரும், பிர்மவஸ்துவினிடத்தில் மூலப்பிரகிருதி தோன்றி அதினின்றும் முறையே ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி எனக்கிரமமாய் உண்டாயிற்று என்று சிலரும் அபிப்பிராயப்படுகின்றனர். திருஷ்டியினால் சிருஷ்டி உண்டாயிற்றே யொழிய வேறெவ்விதத்திலும் அல்ல. திருஷ்டி என்னும் பதத்தை உலகினர் ஸ்தூல சட்சுவிலிருந்து உண்டாகும் பார்வையாகிய அறிவையே விளக்கும் பொருட்டுப் பிரயோகிக்கின்றனர். ஆனால் ஞானேந்திரியங்களின் வழியாய் விரிவுபடுகின்ற மனோவிருத்தியின் பரிணாமமே திருஷ்டி யெனப்படும். இவ்வித திருஷ்டியினாலேயே பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றதன்றி வேறெவ்விதத்தினாலும் அல்ல.

---

20-10-1911. வெள்ளிக்கிழமை.

---

ஆயின், ஜாக்கிரப் பிரபஞ்சத்தின் சிருஷ்டி ஏற்கப்படும். ஸ்வப்பனத்திலும் சுஷுப்தியிலும் ஞானேந்திரியங் காணப்படாமையால், ஸ்வப்பனப் பிரபஞ்சமும் சுஷுப்திப் பிரபஞ்சமும் எவ்வாறு சிருஷ்டிக்கப்படுகி

ன்றன? ஞானேந்திரியங்கள் சொப்பன வஸ்தையில் அடங்கி அதிசூட்சுமமாய் அந்தக்கரணம் என்றபேரை வகித்திருக்கும். சுழுத்திய வஸ்தையில் அந்தக்கரண மானது இன்னும் அதி சூட்சுமமாய் அடங்கி அவித்தை என்றபேரை வகிக்கும். இந்த அவித்தையின் பரிணமமே சிறிது தடித்து அந்தக்கரணவிருத்தி என்றபேரை வகித்து இன்னும் தடித்து ஞானேந்திரியங்களின் வழியாய் விசிரிம்பித்து மனோவிருத்தியெனப்பட்ட திருஷ்டியாகும். இந்தத் திருஷ்டியே சிருஷ்டிக்குக் காரணமாயிருச்கிறது. ஆகையால் அவித்தையின் பரிணமமே சிருஷ்டிக்குக் காரணமாகும். அவித்தையின் பரிணமமே திருஷ்டியெனப்படும். திருஷ்டியே சிருஷ்டியாயிற்று.

---

## 24-10-1911. செவ்வாய்க்கிழமை.

---

எப்படிப் பலவித நிறங்களும் மாறுபட்டு அழிந்து ஒரே நிறமாய்விட்டால் சித்திர வேலை நின்றுபோகுமோ, அப்படியே நாமரூபாதிகளால் பலவாயிருக்கின்ற இப்பிரபஞ்ச வஸ்துக்கள் எல்லாவற்றையும் மாற்றி அழித்து ஏக வஸ்துவாக்கிவிட்டால், பிரபஞ்சவேலையும் நின்று போகும்.

சவ்வியசாசி. இது அர்ஜுனனுக்கு ஒரு பெயர். வலது கையினால் எவ்வளவு வல்லமையுடன் பாணங்களை விட அர்ஜுனன் சக்தனோ, அவ்வளவு வல்லமையுடன் இடது கையினாலும் பாணங்களைவிட சக்தனானதால் அர்ஜுனனுக்கு இப்பெயர் உண்டாயிற்று. வலது கையையும் இடது கையையும் அர்ஜுனன் சம வல்லமையுடன் ஆண்டு வந்தான். உலகத்தில் பொதுவாய் மிக்க

வராலும் வலதுகையே வெகுவாய் சுலபத்தில் உபயோ கப்படுத்தப்படும். வலதுகையைப்போல் இடதுகையை யும் உபயோகித்து வந்த அர்ஜுனனுக்கே ஸ்ரீ கிருஷ் ணன் உபதேசம் செய்தார். அஃதாவது, சுகம் வந்த காலத்துச் சந்தோஷிக்காமலும் துக்கம்வந்த காலத்து விசனிக்காமலும் இருப்பவர் எவரோ அவரே மோட்ச பதவிக்கு அதிகாரியாவர். சாதாரணமாக ஜனங்கள் சுகத் தில் சந்தோஷிப்பவர்களாயும் துக்கத்தில் விசனப் படுப வர்களாயும் காணப்படுகின்றனர். சுக துக்கங்களைச் சம மாய் எண்ணுகிற தீரர்களே முமுட்சுக்களாவார்கள்.

25-10-1911. புதன்கிழமை.

சூரியப் பிரகாசமானது கோட்டானுக்கு இருட்டா கக் காணப்படுகின்றதுபோன்று பிர்மசைதன்னியமானது அஞ்ஞானிகளுக்குப் பிரபஞ்சமாகக் காணப்படுகின்றது.

7-6-12. வெள்ளிக்கிழமை.

ஒரு கோழியும் அதின் குஞ்சுகளும் ஒரு வீட்டினரு கில் மேய்ந்துகொண் டிருக்கும்பொழுது, ஒரு பருந்து அவற்றில் ஒரு குஞ்சை அடித்துக்கொண்டுபோக, அக் குஞ்சு பெட்டையாயிருந்து தவறி விழுந்து தப்பித்துவிட் டால், அது பெரிதாகி முட்டையிட்டுக் குஞ்சு பொறித்து அக்குஞ்சுகளை அது மேய்ப்பிக்கும்போது பருந்து வந்து அடித்தால், அது தன் குஞ்சுகளைக் கவனியாமல் அப் பருந்தை எதிர்த்து அடித்துச் சண்டை செய்யும். தான் குஞ்சாயிருக்கும்பொழுது பருந்தினிடம் ஒரு முறை

அகப்பட்டுத் தவறி தப்பித்துக்கொண்டதால் அதற்குப் பயமேயில்லை. அதுபோல முமுட்சுவும் ஆசாபாசங்களில் ஒரு முறை சிக்கி அவற்றினின்றும் மீட்சிபெறுவானாயின் அவனுக்கு மீண்டுங் காமமாதிகள் வரினும் அவற்றை யவன் கணப்போதிலே போக்கும் மகாவைராக்கிய சம்பன்ன சீலனாயிருப்பான்.

---

## 28-6-1912. சனிக்கிழமை.

---

மாயை இல்லாதது. பிரம்மவஸ்துஉள்ளது. இல்லாததும் உள்ளதும் சேர்ந்தே இந்த அதிவிநோதமான பிரபஞ்சம் உண்டாயிற்று. இந்தப் பிரபஞ்சத்திற்குப் பிதா அழியாதவனாயும் மாதா அழிவுள்ளவளாயும் இருக்கின்றார்கள். மன்மதன் அழிந்தவனாயும் ரதி அழியாதவளாயும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. உபநிஷத்துக்களில் புருஷன் அழியாதவனாயும் ஸ்திரீ அழிவுள்ளவளாயும், புராணங்களில் ஸ்திரீ அழிவில்லாதவளாயும், புருஷன் அழிவுள்ளவனாயும் கூறப்படுகின்றன. உபநிஷத்துக்களுக்கும் புராணங்களுக்கும் இங்ஙனம் நேர் எதிர் மறையான கொள்கைகள் இருக்கின்றன. ஆதலால் அற்ப ஸ்ருதிகளாகிய புராண வசனங்களைத் தள்ளிப் பிரபல ஸ்ருதிகளாகிய உபநிஷத்து வாக்கியங்களைக் கைகொள்வதே மேன்மையாம்.

---

## 1-8-1912.

---

தீவிரதர வசீகார வைராக்கியத்தையுடைய முமுட்சு இப்பிரபஞ்சத்தைப் பொய்யென் றறிந்து தியாகம் செய்

கிருனு அல்லது இப்பிரபஞ்சம் துக்ககரமானது என்று விட்டுவிடுகிறுனு? என்பது ஒரு கேள்வி. முமூட்சுக் களும் மூவகையாவார். இவர்கள் முறையே சத்தையும், சித்தையும், ஆநந்தத்தையும் கைப்பற்றுவதற்காக அடக்க வொண்ணுத ஆத்திரத்துடன் முயல்கின்றவ ராதலாலும், சத்தே சித்தாகவும், சித்தே ஆநந்தமாகவும் இருப் பதாலும் இம் மூவகை முமூட்சுக்களும் போய்ச்சேரும் ஸ்தானம் சச்சிதானந்த ஏகப்பிரம்மவஸ்துவினிடத்திலே யாம். ஜீவராசிகளனைவரும் முமூட்சுக்களே யாவார். அறிவுடனே அறிவின்றியோ அனைவரும் முமூட்சுக்களா யிருப்பது பிரத்தியட்சத்தில் விளங்குகின்றது. பிரபஞ் சம் சொப்பனம்போல் மித்தையென்று கருதி எண்ணி றந்த ஜீவராசிகள் திரிகாலத்திலும் உள்ளனவாய் சாஸ்வத மாய், நித்தியமா யிருக்கப்பட்ட வஸ்துவைக் கண்டு அடையுமாறு படும்பாடு சொல்லுந் தரத்ததன்ரும். உல கத்திலுள்ள பலவித மதங்களும் சாஸ்திர இதிகாசாகமாதி புராணங்களும் இன்னும் அனந்தங்கோடியாய் வேறுபட்டு அவரவர்களது இஷ்டானு சரணையாய் நிற்கின்ற கோட் பாடுகளும் ஆகிய இவைகளெல்லாம் நித்திய நிரந்தர உண் மையைக்கண்டு அடைதற் பொருட்டேயாம். நாளுக்கு நாள் நூதன சாஸ்திரங்களைக் கண்டு பிடித்துக்கொண்டு வருவதினுலேயே சித்சொரூபமாகிய ஞானநிதியைத் தேடிக்கொண் டிருக்கிறுர்களென்று தெரியவில்லையா?

---

1-11-1912-வெள்ளிக்கிழமை.

---

அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்திலும் ஒரு பெருஞ் சத்தம் சதா குமுறிக்கோஷித்துக்கொண் டிருக்

கின்றது. ஆகாயமும் பூமியும் வியாபித்து அந்தரத்தில் எதிரொலி கேட்கின்றது. சமஸ்த கோடி சிருஷ்டி ராசிகளும் 'அஹம், அஹம்' என்று அகங்கரித்து அடங்காத பெருமை வாய்ந்திருக்கின்றன. இதோ பார்! சூரிய சந்திர நட்சத்திர முதலிய ககனராசிகள் பிரபஞ்சம் தம்மையே தேஜஸின் நிமித்தம் ஆஸ்ரயித்திருக்கிறதாகக் கருதி 'நான்' என்னும் அகங்காரத்துடன் புன்னகை புரிந்து தமது பெருமையை ஸ்தாபிக்கின்றன. சமுத்திரமும் தனது பிரம்மாண்டமான அலைகளினால் 'நான், நான்' என்று பேரிடிபோல் முழங்குகின்றது. பர்வதங்களோ 'நான், நான்' எனப் பூரித்து இறுமாந்து எல்லோரையும் ஏறிட்டுப் பார்க்கின்றன. நதிகளோ நறு மணம் கமழ்ந்த மந்தமாருதத்திவலைகளை இருபுறமும் தூவித்தெளித்துக் கொண்டு 'நான், நான்' என்று சலிக்கின்றன. இன்னும் ஜீவராசிகளோ, 'நான், நான்' என்று ஆர்ப்பரித்து அச்சமின்றி அலைந்து திரிகின்றன. மனிதனோ, இப்பூவுலகுக்கு 'நான்' காவலனெனப் பஞ்சபூதங்களையும் அடக்கிக் கையாளமுயற்சி செய்கிறான். ஒவ்வொரு ஸ்திரீயும் 'நானே' அழகிற் சிறந்த அரம்பையென்று கர்விக்கின்றாள். ஒவ்வோர் ஆடவனும் நானே பராக்கிரமத்தில் உயர்ந்த பார்த்தனென்று பதம்பாடுகின்றான். ஆகாயம், வாயு அக்கினி, அப்பு, பிருதிவி என்னப்பட்ட பஞ்சபூதங்களும் ஒன்றோடொன்று பேதமின்றி ஒன்றிக்கொண்டு 'நான், நான்' என்று நவநவமாய் நடிக்கின்றன. இந்த 'நான்' என்னுஞ் சப்தம் வியாபிக்காத இடமேயில்லை. அகங்காரமானது பலவித நாமரூப விஷயபேதத்துடன் சராசரராசிகளில் தோன்றினும், அனைத்தினுக்கும் அஸ்திவாரமாய் 'நான்' என்னுஞ் சப்தம் எங்கும் ஏகமாய் இரண்டற்று நிறைந்திருக்கின்றது. பிரதி நிமிஷமும் மாறிமாறித்

தோற்றப்பட்டு நாநாவித நாமரூபவித்தியாசங்களுக்குட் பட்டிருக்கிற க்ஷணபங்குரமான இப்பிரபஞ்சத்தில் 'நான்' என்னும் ஓர் ஒப்பற்ற சப்தத்துடன் எங்கும் நிறைந்து எக்காலத்தும் நித்தியத்தைப் பறை யறைந்து சமஸ்த கோடிப்பிண்டாண்டங்களும் தானேயாகி சாசுவதமாய்ச் சச்சிதானந்த சொரூபமாய் ஒருவஸ்து உளது என்பதற்கு வேறோர் அத்தாட்சியும் வேண்டுமோ? ஆகையால், ஒவ் வோர் இருதயத்திலுமிருந்து கிளம்புகின்ற 'நான்' என் னும் சப்தமானது அங்கங்கு அந்தந்தச் சரீரங்களின் மூல மாய்ப் பிரதி பலிக்கும் சத்திய வஸ்துவையே விளக்கு கின்றது.

ஆனல், எல்லோரும் 'நான் வருகிறேன், நான் போகிறேன், நான் பிராம்மணன், நான் அரசன், நான் தனவான்,' என்று 'நான்' என்பதை முன்னிட்டுப் பேசுங் கால், ஒவ்வொருவரும் அவரவர்களது சரீரத்தையே 'நான்' எனப்பாவித்து உரைக்கின்றனரேயன்றி ஒருவருக் காவது 'நான் சர்வவியாபகமான சத்திய வஸ்து' என் னும் எண்ணம் இல்லவே யில்லை. தனக்குச் சிறிதும் முன் பின்னறியாத வீட்டில் பிறந்து வளர்ந்து இடையில் தன க்கு மணம் செய்விக்கப்பட்ட ஒரு பெண்ணைத் தனது மனைவி யென்று எங்ஙனம் இடைவிடாது சிந்தனையின் அப்பியாசத்தினலும், தனது சுகதுக்கங்களுக்கு அவள் பாத்தியப் பட்டவள், அவளது சுகதுக்கங்களுக்குத்தான் பாத்தியதைப் பட்டவன் என்ற உலகப்பேயரது போதனை களின் மயக்கங்களினலும் தன் மனைவியாகவே பாவித்து இரவும் பகலும் எக்காலத்தும் அவர்களது சரீர சிசு ருஷையே செய்து வருகின்ற பேதை மானிடரைப்போல 'தேகமே நான்' என்று கபடமற்று உரைக்கின்ற சிசுப்பிரா யம் பொருந்தி யஉலகாயதர்களாலும், தேகம் நானல்ல

வென்று வாசாஞானம் பேசி 'தேகமே நான்' என்று செய்கைகளினால் ஸ்திரப்படுத்துகின்ற கபடம் மலிந்த ஆஷாடபூதிகளினாலும், அனந்தங்கோடி ஜன்மங்களில் வாக்கினாலும் செய்கையினாலும் போதிக்கப்பட்டபடி சரீரத்தையே சதாஸ்மரித்து, 'யத்பாவம் தத்பவதி' என்னும் சுருதிக்கிணங்கச் சரீரமே தானாகிப் பிரபஞ்ச சாகரத்தில் அமிழ்ந்திப் பிரேதகோலம் கொண்டிருக்கின்ற ஜீவர்களுக்கு 'அகண்டமாய் அனைத்துக்கும் அஸ்திவாரமாயிருக்கப்பட்ட சத்திய வஸ்து நான்' என்னும் எண்ணம் எங்ஙனம் உண்டாகும்? அங்ஙனம் அபாரமாய் அளவற்ற மகிமாசக்திகளையுடைய என்னிடத்தில், சமுத்திரத்தில் சதா சலித்துக் கொண்டிருக்கும் அலைகள் போல, தோற்றமாத்திரமாயுள்ள இப்பிரபஞ்சம் தோன்றியும் மறைந்தும் சலித்துக்கொண் டிருக்கின்றது.

பஞ்சகோசத்தினால் பின்னப்பட்ட இச்சரீராதிகள் 'நான்' அல்லவென்று ரூபிப்பதற்கு ஒரு சாதாரணமான திருஷ்டாந்தமே சாலும். 'எனது தலைநோகின்றது, எனது கால்கள் வலிக்கின்றன, எனது சரீரம் பலயீனப்பட்டுவிட்டது' என்று இங்ஙனம் வியவகரிக்கும்பொழுது நீ சரீரத்தினின்றும் வேறுபட்டு சரீரம் நினது உடைமையாயும் நீ உடையவனாயும் ஏற்படுகின்றது. இங்ஙனமே, 'எனது பிராணன் போகின்றது, என் மனம் கேட்கவில்லை, எனது அறிவுக்கெட்டியமட்டிலும் சொல்கிறேன், எனக்குத் திருப்தியில்லை' என்று உரைக்கும் பொழுதெல்லாம் நீ உடையவனாகவும் நினது பிராணன், மனம், அறிவு திருப்தி இவை நினக்கு உடைமைகளாகவும் ஏற்படுகின்றன. ஆகையால், நீ இவைகளல்லவென்றும் இவைகளினின்றும் வேறுபட்டவன் என்றும் சுலபமாய் விளங்கு

கின்றது. ஆகையால், 'நான்' என்னும் சத்தம் பிரபஞ்சத்திற் கெல்லாம் வித்தாகி அம்ஸ பரமஹம்ஸ துரியாதீத அவதூத ஞானிகளாலும் உபநிஷத்துக்களினாலும் சகல மதங்களாலும் சகல தேயங்களிலும் சப்தப்பிரம்மம் எனக் கோஷிக்கப்படுகின்றது. ஆ! நீ எவ்வளவு காலம் உன்னை அறியாமலிருப்பாய்! நீயே நினது கண்களை நினது கைகளினாலேயே மூடிக்கொண்டிருக்கிறாய். கைகளையெடுத்து விடு. கண்களைத் திறந்துபார். திவ்விய தேஜோமயமாகிய உனது அகண்டத்துவத்தில் ஆனந்தமடை.

ஓம் தத் சத்.

## ஞானரத்தினம்.

முதற்பாகம் முற்றிற்று.

175869

## இரண்டாம் பாகம்.

### கர்மரகஸ்யம்.

கர்மபலனிற் போலவே கர்மோபாயத்திலும் அவ்வளவு கவனத்தைச் செலுத்த வேண்டுமென்பது எனது ஜீவியகாலத்தில் நான் கற்றுக்கொண்டிருக்கிற மிகப் பெரிய பாடங்களில் ஒன்று. இதை நான் ஒரு மகா புருஷரிடமிருந்து கற்றுக்கொண்டேன். அவரது சொந்த ஜீவியகாலமே இவ் வுத்தமநீதிக்கு ஓர் அனுபவப் பிரமாணமாயிருந்தது. அவ்வொரே நீதியினின்றும் அரிய பாடங்களை எப்பொழுதும் அறிந்துகொண்டே யிருந்திருக்கிறேன். பலனிற்போலவே அதனை யடையும் உபாயத்திலும் அதிக கவனத்தைச் செலுத்துவதே ஜயமடைவதற்குரிய இரகஸ்ய மென்று எனக்குத் தோன்றுகிறது.

ஜீவிய காலத்தில் நமது பெருங்குற்றம் யாதெனின் நாம் இலட்சியத்தினிடத்தில் அதிகமா யிழுக்கப்படுகிறோம். நாம் விவரண வரலாற்றைப் பூராவாய் மறந்துவிடும்படி இலட்சியமானது நமது மனோதிகந்தத்தில் அவ்வளவு வசியசக்தி வாய்ந்ததாயும் அவ்வளவு நயம் காட்டுவதாயும் அவ்வளவு பெரிதாயும் இருக்கின்றது.

ஆனால் தவறுதல் உண்டாங்காலத்து நாம் நுட்பமாய் ஆராய்ந்து பார்ப்போமானால், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விஷயங்களில் உபாயத்தில் கவனத்தைச் செலுத்தாததே நமது தவறுதலுக்குக் காரணமென்று நாம் அறிந்து கொள்வோம். உபாயத்தைச் சீர்ப்படுத்திப் பலப்படுத்துவதற்குத்தக்க கவனமே நமக்கு அவசியம். உபாயம் திருத்தமானதாயின், பலன் உண்டாகத்தான்

வேண்டும். காரணத்திலிருந்தே காரியம் உற்பவிக்கிறது என்பதை நாம் மறந்துவிடுகிறோம்; காரியம் தானே உற்பவிக்காது ; காரணங்கள் சரியானவையாயும் நியாய மானவையாயும் சக்தி வாய்ந்தனவாயும் இருந்தாலொழிய பலன் உண்டாகாது. ஒருதரம் இலட்சியத்தையும் குறிப் பிட்டு உபாயத்தையும் தீர்மானித்துவிட்டால், நாம் அநேகமாய் இலட்சியத்தை விட்டுவிடலாம்; ஏனென்றால் உபாயம் பூர்த்தி செய்யப்பட்டால் இலட்சியத்தை அடை வோ மென்பது நிச்சயம். காரணமிருக்கும்பொழுது காரியத்தைப்பற்றிக் கஷ்டமில்லை ; காரியம் ஆகத்தான் வேண்டும். நாம் காரணத்தைக் கவனித்துக் கொண்டால், காரியம் தானே தன்னைக் கவனித்துக்கொள்ளும். இலட்சி யானுபவமே காரியம் ; உபாயமே காரணம் ; ஆகையால் உபாயத்திற் கவனமே ஜீவியகாலத்தின் அதிரகஸ்யம். நமது முழுச் சக்தியுடன் சதா கர்மானுசந்தானம் செய்து கொண்டிருக்க வேண்டுமென்றும், நாம் செய்யும் கர்மம் எத்தன்மையதேனும் அக்கர்மத்தை நமது முழுமன துடன் செய்ய வேண்டுமென்றும் நாம் பகவத்கீதையில் படித்தறிகிறோம். அதே காலத்தில் நாம் பற்றற்றிருக்க வேண்டும் ; அஃதாவது, செய்துகொண்டிருக்கும் கர்மத் தினின்றும் வேறு எவ்விஷயங்களினாலும் நாம் இழுக்கப் படக்கூடாது ; இன்னும் நாம் பிரியப்படும்பொழுது, கர்மத்தை விட்டுவிடுதற்குச் சக்தியுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

நாம் நமது ஜீவியகாலங்களைப் பரிசோதித்துப் பார்ப்போமாயின், நாம் ஒரு விஷயத்திற் றலையிட்டுக் கொண்டு அதில் நமது முழு ஊக்கத்தையும் செலுத்து கிறோம் ; ஒரு வேளை அது பயன்தராது போகும். அங் ஙனமாயினும் நாம் அதை விட்டுவிடுகிறதில்லை. அதுவே

நமது துக்கத்திற்கு அதிமுக்கிய காரணமாயுள்ளதென்று அறிகிறோம். அது நம்மைத் துன்பத்திற் குட்படுத்துகிற தென்றும், இன்னும் அதினிடத்திலேயே வாஞ்சை வைத்தால் துக்கத்தையே அளிக்குமென்றும் நாம் அறிந்தும் அவ்விஷயத்தினின்றும் நாம் பிரிந்துகொள்ள முடியவில்லை. தேனீ தேன் உறிஞ்சவந்தது; ஆனால் அதின் பாதங்கள் தேன் குடத்தில் ஒட்டிக்கொண்டன. அது நகர முடியவில்லை. நாமும் அதே மாதிரி ஸ்திதியில் இருப்பதாக அடிக்கடி அறிந்துகொள்கிறோம். அதுதான் வாழ்நாட்களின் பூரண இரகஸ்யம். நாம் ஏன் இங்கே யிருக்கிறோம்? நாம் இங்கே தேன் நக்கவந்து, நமது கைகளும் கால்களும் அதில் ஒட்டிக்கொண்டதாகக் காண்கிறோம். எப்பொழுதும் இது நமது அனுபவம். நமது ஜீவிய காலத்தின் ஒவ்வொரு விஷயமும் இப்படியே யுளது. நாம் மற்ற மனசுகளால் தூண்டப்பட்டுக்கொண் டிருக்கிறோம். நாம் எப்பொழுதும் மற்ற மனசுக்களைத் தூண்டிவிடப் பிரயாசப்பட்டுக்கொண் டிருக்கிறோம். நாம் ஜீவிய கால சுகங்களை அனுபவிக்க விரும்புகிறோம்; அவைகள் நமது உயிர் நிலயத்திற்குள் தின்றுகொண் டிருக்கின்றன. நாம் இயற்கையிலிருந்து எல்லாவற்றையும் அடைய விரும்புகிறோம்; ஆனால் இயற்கை நம்மிடத்திலிருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நம்மை ஒரு பக்கமாய்த் தள்ளிவிடுவதை முடிவில் அறிகிறோம்.

இவ்வண்ணமின்றேல் ஜீவியகாலம் பூரணப் பிரகாசமா யிருந்திருக்கும். ஆயினும் பெரிதல்ல! நாம் மாத்திரம் பிடிக்கப்படாம லிருப்போமாயின், ஜீவிய காலமானது ஜயாபஜயங்களுடனும் சுகதுக்கங்களுடனும் கூடினதாயினும், ஒரு பிரகாசத்தொடர்ச்சியாகவே யிருத்தல் கூடும்.

துக்கத்திற்குக் காரணம் அது ஒன்றேதான்; நாம் பற்றுள்ளவர்களா யிருக்கிறோம். நாம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகையால் கீதை கூறுகின்றதாவது:—இடைவிடாமல் கர்மம் செய், கர்மம் செய், ஆனால் பற்றற்றிரு; பிடிபடாதே. ஜீவன் ஒரு வஸ்துவினிடத்தில் எவ்வளவு ஆசைகொண்டபோதிலும் எவ்வளவு அன்பு பூண்டபோதிலும் அவ்வஸ்துவைத் தியாகம் செய்வதினா லுண்டாகும் துக்கவேதனை எத்துணை அபரிமிதமாய போதிலும், அவ்வஸ்துவினின்றும் உன்னைப் பிரித்துக்கொள்வதற்குள்ள சக்தியை நீ வைத்துக்கொள்; நீ பிரியும்பொழுது அதைவிட்டுவிடும்படியான சக்தியை வைத்துக்கொள். பலஹீனர்கட்கு இங்கு இந்த ஜீவிய காலத்திலும் எந்த ஜீவிய காலத்திலும் இடமில்லை. பலஹீனம் அடிமைத்தனத்திற்கு இட்டுச் செல்கிறது. பலஹீனம் காயிகமாயும் மானசிகமாயும் உள்ள எல்லாவித துக்கங்கட்கும் ஏதுவாகின்றது. பலஹீனமே மரணம். நம்மைச்சுற்றிலும் இலட்சக்கணக்கான கிருமிகள் இருக்கின்றன. ஆனால் நாம் பலஹீனர்களாய் விட்டாலொழிய, சரீரம் அவைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராகும் வரையில் அவை நமக்குத் தீங்குசெய்ய முடியாது. நம்மைச்சுற்றிலும் இலட்சக்கணக்கான துக்கக்கிருமிகள் சஞ்சரித்துக்கொண் டிருக்கலாம். ஆயினும் பெரிதல்ல! அவை நம்மிடத்தில் நெருங்கத் துணியா; மனம் பலஹீனமாகும் வரையில் நம்மைப் பிடித்துக்கொள்வதற்கு அவைகட்குச் சக்தியில்லை. இதுதான் உண்மை; பலமே ஜீவன்; பலஹீனமே மரணம். பலமே சுகம், நித்திய ஜீவன், அட்சரம்; பலஹீனமே இடைவிடாத துக்கமும், மரணமுமாம்.

பற்றே நமது சுகங்களுக்கெல்லாம் மூலமாயிருக்கின்றது. நாம் நமது சினேகிதர்களிடத்திலும் பந்துக்

களிடத்திலும் பற்றுள்ளவர்களாயிருக்கிறோம்; நாம் நமது புத்திசாமர்த்திய கர்மங்களிலும் ஞானகர்மங்களிலும் பற்றுள்ளவர்களா யிருக்கிறோம். புறவஸ்துக்களிடத்தி லிருந்து சந்தோஷத்தை அடையுமாறு அவைகளிடத்திற் பற்றுள்ளவர்களா யிருக்கிறோம். இந்தச் சேர்க்கையைத் தவிர துக்கத்தைக் கொண்டுவருவது வேறு யாது? ஆனந்த மடைவதற்கு நாம் நம்மைப் பிரித்துக்கொள்ள வேண்டும். இஷ்டப்படி நம்மைப் பிரித்துக்கொள்வதற்கு நமக்குச் சக்தியிருந்தால், துக்கமே இராது. யாவனொருவன் தனது முழு ஊக்கத்துடனும் ஒரு வஸ்துவினிடத்திற் பற்றுக்கொள்வதற்குச் சக்தியுடையவனுயிருந்து, அவன் வேண்டும்பொழுது அவ்வஸ்துவினின்றும் தன்னைப்பிரித்துக்கொள்வதற்கும் சக்தி யுடையவனு யிருக்கிறுனே அவனே சிருஷ்டியின் முக்கிய நன்மைகளை அடைய முடியும். கஷ்டம் யாதெனின், நீக்கத்திற்போலச் சேர்க்கையிலும் அவ்வளவு ஊக்கம் இருக்கவேண்டுமென்பதே. எவ்வஸ்துவினுலும் ஒருபொழுதும் ஈர்க்கப்படாத மனிதரும் உளர். அவர்கள் ஒருபொழுதும் நேசிக்க முடியாது. அவர்கள் கடின ஹிருதய முடையவர்களாயும் உணர்ச்சி யற்றவர்களாயும் இருக்கின்றனர். அவர்கள் ஜீவியகாலத்தின் மிக்க துக்கங்களினின்றும் தப்பித்து விடுகின்றனர். ஆனல் சுவர் ஒருபொழுதும் துக்கத்தை உணர்கிறதில்லை, சுவர் ஒருபொழுதும் நேசிக்கிறதில்லை, ஒருபொழுதும் துன்பமடைகிறதில்லை. ஆயினும் அது சுவர்தானே. ஒரு சுவரா யிருப்பதைப்பார்க்கிலும் பற்றுதலடைந்து பந்தத்துட்படுவது நிச்சயமாய் மேன்மையே. ஆகையால், கல்லைப்போன்று, கடினமாய், அன்பென்பதை அறியாமல், ஜீவியகால துக்கங்களில் மிக்கவற்றினின்றும் தப்பித்துக்கொள்கிற மனிதன் அதின் சுகங்க

ளேயும் தவறவிட்டு விடுகிறான். நாம் அதை விரும்பவில்லை; அது பலஹீனம்: அது மரணம். பலஹீனத்தையும் துக்கத்தையும் ஒருபொழுதும் அறியாத ஜீவன் உயர் பதவிக்குச் செல்ல விரும்புகின்றதில்லை. அது கடினமான ஸ்திதி. நாம் அதை விரும்போம்.

அதே சமயத்தில், மற்ற ஜீவர்களுக்காக 'நாம்' என்பதை யிழந்து, 'நாம்' என்பதை அழித்து ஒரே விஷயத்தில் நமது ஜீவன் முழுமையும் செலுத்தும்படியான சக்தியை, பற்றுதலாகிய இந்த மகத்தாகிய சக்தியை, அன்பாகிற இவ்வலிய சக்தியை மாத்திரம் அல்ல நாம் விரும்புவது—இது தேவதைகளின் சக்தி; ஆனால் நாம் தேவதைகளைப் பார்க்கிலும் உயர்ந்தவர்களாக இச்சிக்கின்றோம். பரிபூரண புருஷன் தனது ஜீவன் முழுமையும் அன்பாகிற ஒரே முனையில் செலுத்தக்கூடும்; ஆனாலும் அவன் பற்றற்றவனாகவே யிருக்கிறான். இது எங்ஙனம்? நாம் அறிந்து கொள்வதற்கு இன்னொரு இரகஸ்யம் உளது.

யாசகன் ஒரு பொழுதும் சுகமடைகிறதில்லை. யாசகன் பரிதாபத்துடனும் பழிப்புடனும் கூடிய துக்கத்தையே அடைகிறான். தான் அடைகிறதை ஒருபொழுதும் அவன் உண்மையாக அனுபவிக்கிறதில்லை.

நாம் அனைவரும் யாசகர்களே. நாம் செய்வதற்கெல்லாம் பதில் விரும்புகிறோம். நாம் அனைவரும் வியாபாரிகள்; நாம் சன்மார்க்கத்தில் வியாபாரிகள், நாம் மதத்தில் வியாபாரிகள். அந்தோ! நாம் அன்பிலும் வியாபாரிகளா யிருக்கிறோம்.

நீ வர்த்தகம் செய்யவருவதானால், 'கொடு—எடு' என்ற கேள்வியானால், கிரய விக்கிரயக் கேள்வியானால், கிரய விக்கிரய நீதிகளின்படி நடந்துகொள். தாழ்வு கால

மும் வாழ்வு காலமும் உண்டு ; விலையில் ஏற்றமும் இறக்கமும் உண்டு ; எப்பொழுதும் கெடுதியை எதிர் பார்த்துக் கொண்டேயிருக்கிறோம். அது கண்ணாடியிற் பார்ப்பதுபோல நினது முகம் பிரதிபலிக்கப்படுகிறது. நீ கோரணி செய்தால் கண்ணாடியிலும் அதே தெரிகிறது ; நீ சிரித்தால் கண்ணாடி சிரிக்கிறது. இதுதான் கிரய விக்கிரயம் ; 'கொடு—எடு' என்ற கொள்கை.

நாம் அகப்பட்டுக் கொள்கிறோம். எப்படி? நாம் கொடுக்கிறதினாலல்ல, ஆனால் நாம் எதிர்பார்க்கிறதினால். நமது அன்பிற்குப் பிரதியாக துக்கத்தை அடைகிறோம். நாம் அன்பு செலுத்துகிறதினாலல்ல, ஆனால் பதிலாக அன்பை விரும்புகிறதினால். விருப்ப மின்றிய விடத்துத் துக்கம் இல்லை. ஆசை, விருப்பம் சகல துக்கத்திற்கும் பிதா. ஆசைகள் ஜயாபஜய நீதிகளினால் கட்டுப்பட்டிருக்கின்றன. ஆசைகள் துக்கத்தை அளிக்கத்தான் செய்யும்.

உண்மையான ஜயத்தினுடைய, உண்மையான சுகத்தினுடைய பரம இரகஸ்யம் இதுதான். பதில் கேட்காத மனிதனே, பரிபூரணமாய் சுயநன்மை யற்ற மனிதனே மகா ஜயசாலியாயுளன். அஃது ஓரசத்தி, யாபாசமாய்த் தோன்றுகிறது. ஜீவிய காலத்தில் சுய நன்மையற்ற ஒவ்வொருவரும் வஞ்சிக்கப்பட்டுத் துன்பமடைகின்றனரென்பதை நாம் அறியோமோ ?

ஒன்றையும் கேட்காதே ; கைம்மாருக ஒன்றையும் விரும்பாதே. நீ கொடுக்கவேண்டியதைக் கொடு : அது உன்னிடத்தில் திரும்பிவரும். — ஆனால் இப்பொழுது அதைப்பற்றி நினைக்காதே. அஃது ஆயிரம்மடங்கு அதிகரித்துத் திரும்பிவரும்.—ஆனால் கவனம் அதன்மேல்

இருக்கக்கூடாது. ஆபினும் கொடுக்கும் சக்தி உனக்கிருக்கட்டும். கொடுக்க மாத்திரம் செய். ஜீவிய காலம் முழுமையும் ஈகையே என்று அறிந்துகொள். நீ கொடுக்கும்படி இயற்கை உன்னைப் பலவந்தம்செய்யும். ஆகையால் மனப்பூர்வமாய்க் கொடு. இப்பொழுதாவது எப்பொழுதாவது நீ கொடுக்கத்தான்வேண்டும். சேர்த்து வைப்பதற்காகவே நீ ஜீவிதத்தை அடைகிறாய். கைகளை மூடிக்கொண்டு எடுக்க விரும்புகின்றாய். ஆனால் சிருஷ்டி நினது தொண்டையிற் கைவைத்து நினது கைகளை விரிக்கும்படி செய்கின்றது. உனக்கு இஷ்டம் இருக்கினும் இல்லாவிடினும், நீ கொடுக்கத்தான் வேண்டும். நான் கொடுக்கமாட்டேனென்று நீ சொல்லுகிற அந்த நிமிஷத்திலேயே கிடைக்கிறது அடி; நீ துன்பப்படுகிறாய். ஈற்றில் எல்லாவற்றையும் கொடுத்துவிடும்படியாகக் கட்டாயப்படுத்தப் படாதவர்கள் ஒருவரும் இரார். ஒருவன் இந்நீதிக்கு விரோதமாக எத்துணை முயற்சி செய்கிறானோ அத்துணை துக்கத்தை அவன் அனுபவிக்கிறான். நாம் கொடுக்கத் துணியாததினாலேயே, சிருஷ்டியின் இம்மகத்தான கேள்விக்கு நாம் ஒப்புக்கொடுக்காததினாலேயே, நாம் துக்கத்திற் குள்ளாகிறோம். காடுபோய்விட்டது, ஆனால் அதற்குப் பதிலாக உஷ்ணத்தை அடைகின்றோம். திரும்பவும் மழையாகப் பொழியும் பொருட்டு, சூரியன் சமுத்திரத்திலிருந்து ஜலத்தை எடுக்கிறான். எடுப்பதற்கும் கொடுப்பதற்கும் நீ ஒரு யந்திரம்; கொடுக்கும் பொருட்டு நீ எடுக்கிறாய். ஆகையால் கைம்மாறாக ஒன்றையும் கேட்காதே; ஆனால் நீ எவ்வளவு கொடுக்கிறாயோ அவ்வளவு உனக்குக் கிடைக்கும். இவ்வறையிலிருந்து காற்றை எவ்வளவு சீக்கிரத்தில் வெளிப்படுத்துவாயோ, அவ்வளவு சீக்கிரத்தில் வெளிக்காற்று உட் பிரவேசிக்கும்.

எல்லாக் கதவுகளையும் பலகணிகளையும் மூடிவிட்டால் அகத்துள்ளது இருக்கும் ; ஆனால் புறத்தேயுள்ளது ஒரு பொழுதும் உள்ளேவராது ; அகத்தேயுள்ளது கெட்டு அழிந்து நஞ்சிட்டுப்போகும். ஒரு நதி இடைவிடாமல் சமுத்திரத்தில் விழுந்துகொண்டும் மறுபடியும் நிரம்பிக் கொண்டுமிருக்கிறது. சமுத்திரத்திற்குள் விழுவதைத் தடுக்காதே. நீ அவ்வாறு செய்யும் நிமிஷமே மரணம் உன்னைப் பிடிக்குமென்றறி.

ஆகையால் யாசகனுயிராதே ; பற்றற்றிரு. ஜீவிய காலத்தில் இதுவே மிகப் பயங்கரமான வேலை ! மார்க்கத்திலுள்ள அபாயங்களை நீ எண்ணுகிறதில்லை. புத்தியினால் கஷ்டங்களை அறிந்துகொண்டபோதிலும் நாம் அவைகளை உணர்கிற வரையில் அவை நமக்குத் தெரிகிறதில்லை. ஒரு சிங்காரவனத்தின் சாதாரணக் காட்சியைத் தூரத்திலிருந்து நாம் அறியலாம்; நல்லது, அதனாலென்ன ? நாம் அதில் இருக்கும் பொழுதே உண்மையாயுணர்ந்து அறிகிறோம். நமது ஒவ்வொரு முயற்சியும் தவறிவிட்டாலும், நாம் பொறுக்கவொண்ணாத கஷ்டங்களை அனுபவித்தாலும் இவற்றினூடே நமது மனோதைரியத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இவ்வெல்லாக் கஷ்டங்களின் மத்தியிலும் நமது தெய்வத்தன்மையை நாம் வற்புறுத்த வேண்டும். சிருஷ்டி, செய்கைக்கு மாறு செய்கையும், அடிக்கு அடியும், மோசத்திற்கு மோசமும், பொய்க்குப் பொய்யும் திரும்பக் கொடுக்கும்படியாகவும் நமது பூரண சக்தியுடன் திருப்பி அடிக்கும்படியாகவும் போதிக்கின்றது. அப்படியானால், திருப்பி அடிக்காமல் அடக்கமாய்ப் பற்றற்றிருப்பதற்கு தெய்வாதீதமான சக்தி ஆவசியகமாயிருக்கின்றது

பிரதி தினமும் நாம் பற்றின்றி யிருக்கவேண்டு மென்று தீர்மானம் பண்ணுகிறோம். நாம், பின்புறம் நோக்கி, இறந்த காலத்தில் நமது அன்பிற்கும் ஆசைக் கும் உரித்தா யிருந்த வஸ்துக்களைப் பார்த்து அவற்றில் ஒவ்வொன்றும் எங்ஙனம் நம்மைத் துக்கத்திற்குட்படுத்தி விட்டன என்று உணர்கிறோம்; நமது விருப்பத்தால் ஆழ்ந்த ஏக்கத்திற் குட்பட்டோம். நாம் பிறவஸ்துக் களின் கீழ் கேவலம் அடிமைகளாயிருக்கக் கண்டுகொண் டோம்; நாம் மேன்மேலும் கீழேயே இழுக்கப்பட்டோம். "இனிமேல் எனக்கு நானே எஜமானனா யிருப்பேன்; இனிமேல் என்னை நானே அடக்கிக் கொள்வேன்" என்று நாம் ஒரு புதிய தீர்மானம் செய்கிறோம். ஆனால், கால மாக, மறுபடியும் அதே கதைதான். மறுபடியும் ஜீவன் தப்பித்துக்கொள்ள முடியாமல் அகப்பட்டுக்கொண்டுவிடு கிறான். பட்சி பதைத்துக்கொண்டு, மிகக் கஷ்டானுபவத் துடன் ஒரு கூட்டில் இருக்கிறது. இதுதான் நமது ஜீவிய காலம்.

கஷ்டங்களை நான் அறிவேன்; அவைகள் அஞ்சத் தக்கவையா யிருக்கின்றன. நம்மில் நூற்றுக்குத் தொண் ணூறு பேர் முயற்சி யழிந்து மனோ தைரியத்தை இழந்து நமது முறையில் அநேகமாய்ப் பிரதிகூலவாதிகளாகி, உண்மையிலும் அன்பிலும் இன்னும் உயர்ந்ததும் சிறந்த துமான எல்லாவற்றிலும் நம்பிக்கையற்று விடுகிறார்கள். ஆகையால் ஜீவியகாலத் துவக்கத்தில் பிழைபொறுத்தல், பிரியம், டம்பமின்மை, களங்கமின்மை முதலிய குணங் களை யுடைத்தாயிருந்த மனிதர்கள் அவர்களது விருத் தாப்பியப் பருவத்தில் பொய்வேஷ தாரிகளா யிருக்க நாம் பார்க்கிறோம். அவர்களது மனோ நிலைமை குழப்

பத்தின் ஒரு கூட்டமாயிருக்கிறது. வெளித் தந்திரங்கள் பல விருக்கலாம்; அவர்கள் படபடத்தவர்கள் அல்ல. அவர்கள் பேசுகிறதில்லை; ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது மிக நன்மையாயிருக்கும். அவர்களது ஹிருதயங்கள் உயிரற்றுவிட்டன; ஆகையால் அவர்கள் பேசுகிறதில்லை. அவர்கள் சபிக்கிறதில்லை, கோபிக்கிறதில்லை; ஆனால் அவர்கள் கோபசக்தியை வகித்தல் நல்லது; சாப சக்தியை வகித்தல் ஆயிரம் மடங்கு நல்லது; அவர்களால் முடியாது, ஹிருதயம் மரித்துவிட்டது. குளிர்ந்த கைகள் அதைப் பிடித்துக்கொண்டன; ஒரு சாபமிடுவதற்குக்கூட, ஒரு கொடூரவார்த்தை வசனிப்பதற்குக் கூடச் சக்தியற்று விட்டது.

நாம் இவற்றை யெல்லாம் நீக்கவேண்டும்; ஆதலினாற்றான் தெய்வ சக்தி வேண்டுமென்று நான் சொல்லுகிறேன்; மனுஷ்ய சக்திக்குப் போதுமான பலமில்லை. தெய்வ சக்தியே புறம்பிற் போவதற்கு ஒரே வழி. அச்சக்தியினாலேயே, இக்குழப்பங்களினூடே, இந்தத் துக்கக் கூட்டங்களினூடே அபாயமின்றிச் செல்லலாம். நாம் துண்டுதுண்டாக வெட்டப்படலாம், சித்திரவதை செய்யப்படலாம்; ஆயினும் நமது ஹிருதயங்கள் அக்காலங்களில் பெருந்தன்மையில் மேன்மேலும் விசாலிக்க வேண்டும்.

அது மிகவும் கஷ்டம்; ஆனால் இடைவிடாப் பழக்கத்தினால் கஷ்டத்தை ஜயிக்கலாம். நாம் நம்மை உணர்ச்சி யுள்ளவர்களாக்கிக் கொண்டாலொழிய ஒன்றும் நமக்கு நேரிடாது என்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். சரீரம் தயாராயிருந்தாலொழிய எனக்கு வியாதி வராதென்று இப்பொழுதுதான் சொல்லியிருக்கிறேன்.

வியாதியின் உற்பத்தி கிருமிகளினால் மாத்திரம் அல்ல, சரீரத்தில் முன்னரே ஏற்பட்டிருக்கிற ஒருவித அனுசரணையையும் பொறுத்திருக்கிறது. நமக்கு அடையத் தகுந்ததை நாம் அடைகிறோம். நமது கர்வத்தை ஒழித்துவிட்டு துக்கம் ஒருபொழுதும் அபாத்திரருக்கு உண்டாவதில்லையென்று அறிந்துகொள்வோமாக. துன்பம் அபாத்திரமாய் உண்டாவதில்லை. நாம் அதை அறிய வேண்டும். நீ உன்னைப் பகுத்து ஆராய்ந்து பார்த்தால், நீ பெற்றிருக்கிற ஒவ்வொரு அடியும் நினது செய்கையினாலேயே உனக்குக் கிடைத்ததென்று அறிந்துகொள்வாய். நீ பாதி செய்தாய்; வெளியுலகம் பாதி செய்தது. இவ்விதமாக அடி கிடைத்தது. அது நம்மைத் தெளியச் செய்யும். அதேகாலத்தில் இப்பகுத்தறிவினின்றும் ஒரு நம்பிக்கைச் சீட்டு உதயமாம்; அந்நம்பிக்கைச் சீட்டாவது: "வெளியிலுள்ள பிரபஞ்சம் எனது அடக்கத்திலில்லை; ஆனால் என்னுள்ளும் சமீபத்தும் உள்ள எனது சொந்த உலகம் எனது அடக்கத்தில் இருக்கிறது. தவறுதலுண்டுபண்ண இவ்விரு உலகமும் சேரவேண்டியது அவசியமானால், எனக்கு அடிகொடுக்க இரு உலகமும் சேரவேண்டியது அவசியமானால், என் அடக்கத்தில் இருக்கிற உலகத்தை வெளி யுலகத்துடன் சேரவிடமாட்டேன். இங்ஙனமாயின் அடி எங்ஙனம் உண்டாகும்? நான் என்னை உண்மையாய் அடக்கிக்கொண்டால் அடி ஒரு பொழுதும் உண்டாகாது."

நமக்குப் புறம்பேயுள்ள யாதேனும் ஒரு வஸ்துவின் மேல் குற்றத்தைச் சுமத்த, நமது குழந்தைப் பருவத்திலிருந்தே நாம் எப்பொழுதும் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நாம் எப்பொழுதும் நம்மைத் தவிரப் பிற

ரைச் சீர்திருத்தம் செய்யத் தயாராயிருக்கிறோம். நாம் துக்கத்தை அனுபவிக்குங்கால், "ஆ! உலகம் பேயுலகம்," என்று கூறி, "மாயையிற்பட்ட முட்டாள்கள்" என்று பிறரைச் சபிக்கிறோம். ஆனால், நாம் உண்மையில் மிக நல்லவர்களாயின், இத்தகைய உலகில் ஏன் இருக்கவேண்டும்? இது ஒரு பேயுலகாயின், நாமும் பேய்களாக வேண்டும்? இன்றேல் ஏன் நாம் இங்கிருக்க வேண்டும். "ஆ! உலகினர் மிகவும் சுயநலப்பிரியர்." வாஸ்தவம் தான். ஆனால், நல்லவர்களா யிருக்கிற நாம் ஏன் அவர்களது கூட்டத்திற் காணப்பட வேண்டும்? இதை யோசித்துப் பாருங்கள்.

நமக்குத் தகுந்ததை நாம் அடைகிறோம். உலகம் கெட்டதென்றும் நாம் நல்லவர்களென்றும் உரைப்பது ஒரு பொய்யாம். அது அங்ஙனம் இருத்தல் முடியாது. அது நமக்குத்தானே நாம் சொல்லிக் கொள்கிற ஒரு பயங்கரமான பொய்யாகும்.

இதுதான் அறியவேண்டிய முதற்பாடம். புறம்பேயுள்ள எவ்வஸ்துவையும் சபிக்காம லிருக்கவும், புறம்பேயுள்ள எவர்மீதும் குற்றம் சுமத்தாம லிருக்கவும் தீர்மானித்துக்கொள்; ஆனல் மனுஷ்யனயிரு. எழுந்திருந்து நில்; உன்மீதே குற்றம் சுமத்திக்கொள். அதுஎப்பொழுதும் உண்மையென்று நீ கண்டுகொள்வாய். உன்னையே நீ பிடித்துக்கொள்.

ஒரு நிமிஷத்தில் "நாம் மகா புருஷர்கள், தெய்வீகத்தன்மை பொருந்தியவர்கள், சர்வக்ஞர்கள், சர்வசக்தர்கள், குற்றமற்றவர்கள், களங்கரகிதர்கள், உலகிற் சுயநன்மையை அறவே களைந்தவர்கள்" என்று இங்ஙன

மெல்லாம் நம்மையே நாம் புகழ்ந்து கொண்டு, மறு நிமிஷத்தில் ஒரு சிறிய கல்லினுல் நாம் துன்பமடைவதும், ஒரு சிறுவனது கோபத்தினுல் நமக்கு வருத்தம் உண்டாவதும் நமக்கு வெட்கமா யிருக்கவில்லையா? தெருவிற் செல்கிற எந்த முட்டாளும் "இந்ததேவதைகளை" துக்கத்திற்குட்படுத்தி விடுகிறுன்! நாம் அத்தகைய தேவதைகளாயின் இங்ஙனம் இருக்கவேண்டுமோ? உலகம் குற்றத்திற்குப் பாத்தியதைப் படவேண்டுமென்பது உண்மையோ? மேன்மையிலும் பரிசுத்தத்திலும் மிக்க ஈஸ்வரனை நமது தந்திரங்களால் துன்பப்படுத்த முடியுமோ? நீ சுய நலமற்றவனுயின் நீ ஈஸ்வரனைப் போலவேயிருக்கிறுய். எவ்வுலகம் உன்னைத் துன்பப்படுத்தக்கூடும்? ஏழாவது நரகத்தூடேயும் நீ அபாயமின்றியும் பற்றின்றியும் செல்லலாம். ஆனுல் நீ குறைகூறி வெளியுலகத்தின் மீது குற்றத்தைச் சுமத்த விரும்புவதே வெளியுலகத்தை நீ உணர்கிறுயென்று ரூபிக்கின்றது.--நினது உணர்ச்சியே நீ எப்படி இருக்க உரிமை பாராட்டுகிறுயோ அப்படி நீ இல்லையென்று ரூபிக்கின்றது. "ஆ! இப்பேயுலகம்! இவன் என்னைத் துன்பப் படுத்துகிறுன் அவன் என்னைத் துன்பப்படுத்துகிறுன்" என்று கத்தி, வெளியுலகம் உன்னைத் துன்பப்படுத்துவதாக நீ கற்பித்துக்கொண்டும் துக்கத்தின் மேல் துக்கமாய்ச் சேர்த்துக்கொண்டும் நினது குற்றத்தை நீ மேன்மேலும் பெருக்குகிறுய். அது துக்கத்துடன் பொய்யையும் சேர்க்கிறதாகும்.

நம்மை நாமே கவனித்துக் கொள்ளவேண்டும். நாம் அங்ஙனம் செய்யக்கூடும். சில காலத்திற்கு நாம் பிறரைக் கவனித்தலை விட்டுவிடலாம். நாம் உபாயத்தைப் பூர்த்தி செய்வோமாக. பலன்தானே உண்டாகும். நமது ஜீவிய

காலம் நன்மையாயும் சுத்தமாயும் இருந்தால்தான், உலகம் நன்மையாயும் சுத்தமாயும் இருத்தல்கூடும். அது காரியம்; நாம் உபாயம். ஆகையால் நாம் நம்மையே சுத்தப்படுத்திக் கொள்வோமாக! நாம் நம்மையே பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

ஓம் தத் ஸத்.

ஞானரத்தினம்.

இரண்டாம் பாகம் முற்றிற்று.

R65
A122
சென்னை-600 008.
175869

PRINTED AT THE "ANANDA BODHINI" PRESS, MADRAS.

# மனமோகினி

## ஓர் மாதாந்தச் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922ளு பிப்ரவரிமீ 1உ வெளியாயாய்விட்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய **ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால்** எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

---

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ள-ள-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் | 4 | 0 |
| கற்கோட்டை | 2 | 0 |
| தேவசுந்தரி | 1 | 4 |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | |
| சுவர்ணாம்பாள் | 0 | 12 |
| ஆனந்தவிங் | 2 | 0 |
| மதனபூஷணம் | 1 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடையசரித்திர உபதேசங்கள் | 1 | 12 |
| தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| பத்மாஸனி | 0 | 14 |
| வீரநாதன் | 0 | 12 |
| மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| பவளத்தீவு-அச்சில் | | |
| பூங்கோதை | 0 | 10 |
| இந்திராபாய் அச்சில் | | |
| குணசுந்தரன் | 0 | 12 |
| சகோதரவாஞ்சை | 0 | 6 |
| ஹை ஸ்கூல் பதிப்பு | 0 | 7 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.